ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
| திகதி | 2018.12.21 |

## வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் - 2018 ஒத்தோபர்

**பொதுநோக்கு**

2018 ஒத்தோபரில் இலங்கையின் வெளிநாட்டுத் துறை தொடர்ந்தும் அழுத்தத்திற்கு உட்பட்டிருந்தது. ஒத்தோபரில் ஏற்றுமதிகளில் சிறிதளவு வளர்ச்சி காணப்பட்ட வேளையில், இறக்குமதிச் செலவினம் உயர்ந்த வளர்ச்சியைக் கொண்டிருந்தமையின் காரணமாக வர்த்தகப் பற்றாக்குறை குறிப்பிடத்தக்களவிற்கு விரிவடைந்தது. எனினும், குறிப்பிட்ட இறக்குமதி வகைகளின் மீது அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகளின் காலங்கடந்த தாக்கத்தின் காரணமாக இனிவரும் ஆண்டுகளில் இறக்குமதிகளின் அதிகரித்துச் செல்லும் போக்கு குறைவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை, தொழிலாளர் பணவனுப்பல்கள் ஒத்தோபரில் ஆரோக்கியமான அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்த வேளையில் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் சிறிதளவு அதிகரிப்பினைப் பதிவுசெய்தன. நிதியியல் கணக்கு, அரச பிணையங்கள் சந்தை மற்றும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை என்பனவற்றிலிருந்தான வெளிநாட்டு முதலீடுகள் வெளிப்பாய்ந்தமையைக் காட்டியது. வெளிநாட்டு நாணய வெளிப்பாய்ச்சல் இறக்குமதிச் செலவினத்துடன் சேர்ந்து உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் மீது அழுத்தமொன்றினை ஏற்படுத்தின. இதன் விளைவாக, இலங்கை ரூபா, ஆண்டின் முதல் பத்து மாத காலப்பகுதியில் 12.3 சதவீதத்தினால் தேய்வடைந்தது. மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2018 செத்தெம்பர் இறுதியின் ஐ.அ.டொலர் 7.2 பில்லியனிலிருந்து ஒத்தோபர் இறுதியில் ஐ.அ.டொலர் 7.9 பில்லியனுக்கு அதிகரித்தமைக்கு ஐ.அ.டொலர் 1 பில்லியன் கொண்ட வெளிநாட்டு நாணய கால நிதியிடல் வசதி கிடைக்கப்பெற்றமை உதவியாக அமைந்தது.

## அட்டவணை 1: வெளிநாட்டுத்துறைச் செயலாற்றத்தின் தொகுப்பு [அ]

| வகை | ஒத் 2017 ஐ.அ.டொ. மில் | ஒத் 2018 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) | சனவரி - ஒத் 2017 ஐ.அ.டொ. மில் | சனவரி - ஒத் 2018 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| ஏற்றுமதிகள் | 976 | 979 | 0.4 | 9,400 | 9,877 | 5.1 |
| இறக்குமதிகள் | 1,727 | 1,882 | 9.0 | 16,991 | 18,734 | 10.3 |
| வர்த்தக மீதி (தேறிய) | -752 | -903 | | -7,591 | -8,857 | |
| சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் | 283 (ஆ) | 284(இ) | 0.5 | 3,161 (ஆ) | 3,496 (இ) | 10.6 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 546 (ஈ) | 599 | 9.7 | 5,904(ஈ) | 5,876 | -0.5 |
| கொழும்பு பங்குப் பரிவர்த்தனைக்கான உட்பாய்ச்சல் (தேறிய) (உ) | 13 | -36 | | 279 | 0.9 | |
| அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல் (மொத்தம்) (ஊ) | 260 | 1,152 | | 4,857 | 5,321 | |
| தி.உண்டியல்கள் மற்றும் தி.முறிகள் | 142 | 17 | | 1,403 | 698 | |
| நீண்ட காலக் கடன்கள் (ஊ) | 118 | 135 | | 954 | 1,123 | |
| கூட்டுக் கடன்கள் | - | 1,000 | | 1,000 | 1,000 | |
| நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் | - | - | | 1,500 | 2,500 | |
| ப.நா.நிதிய விரிவாக்கப்பட்ட நிதிய வசதிப் பெறுகைகள் | - | - | | 167 | 252 | |
| வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (எ) | | | | 693 | 1,801 | |
| திரண்ட நிலுவை | | | | 1,991 | -157 | |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை, இலங்கை முதலீட்டுச் சபை,

(அ) தற்காலிகமானது.

(ஆ) 2017 இற்கான நாளொன்றிற்கான தங்கியிருக்கும் காலம் மற்றும் சராசரிச் செலவு மதிப்பீடுகள் பற்றி இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அளவீட்டுப் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு திருத்தப்பட்டது.

(இ) 2018 இற்கான அதன் அளவீட்டுப் பெறுபேறுகளை இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை வெளியிட்டதும் இத்தற்காலிக மதிப்பீடு திருத்தம் செய்யப்படலாம்.

(ஈ) திருத்தப்பட்டது.

(உ) இரண்டாந்தரம் மற்றும் முதனிலைச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.


(ஊ) அரசாங்கத்திற்கான வெளிநாட்டுக் கடன்களுக்கான தரவுகள் மாதாந்தத் தரவுகளுக்காக செத்தெம்பர் மாதத்திற்கு மாத்திரமும் முதல் ஒன்பது மாதங்களுக்காக ஒன்றுசேர்ந்த தரவுகளும் கிடைக்கத்தக்கதாக இருந்தது.

(எ) ஒவ்வொரு காலப்பகுதியினதும் முதல் மூன்று மாதங்களுக்கான கிடைக்கத்தக்க தரவுகள் இலங்கை முதலீட்டுச் சபையினால் பதிவுசெய்யப்பட்டவாறான நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்களையும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான தேறிய நேரடி முதலீடுகளையும் உள்ளடக்குகிறது.

### வர்த்தக நிலுவை

இறக்குமதிகளில் ஏற்பட்ட உயர்ந்த வளர்ச்சியின் காரணமாக வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை 2017 ஒத்தோபருடன் ஒப்பிடுகையில் 2018 ஒத்தோபரில் குறிப்பிடத்தக்களவிற்கு விரிவடைந்தது. ஒன்றுசேர்ந்த அடிப்படையில், வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை 2017இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2018இன் முதல் பத்து மாத காலப்பகுதியில் விரிவடைந்தது.


**வரைபடம் 1: மாதாந்த வணிகப்பொருள் வர்த்தக செயலாற்றம் - 2018**




மூலம்: இலங்கை சுங்கம், இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் செயலாற்றம்

**வரைபடம் 2: மாதாந்த ஏற்றுமதிச் செயலாற்றம்**




மூலம்: இலங்கை சுங்கம், இலங்கை மத்திய வங்கி

2018 ஒத்தோபரில் வணிகப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 979 மில்லியனுக்கு 0.4 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) அதிகரித்தது. ஒத்தோபரில் ஏற்றுமதிகளின் சிறிதளவு வளர்ச்சியானது கைத்தொழில் ஏற்றுமதிகளின் 4.5 சதவீத வளர்ச்சியை எதிரீடு செய்த வேளாண்மை ஏற்றுமதிகள் 11.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையின் மூலம் முக்கியமாகப் பிரதிபலிக்கப்பட்டது. கைத்தொழில் ஏற்றுமதிகளின் கீழ் புடவை மற்றும் ஆடைகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 2018 ஒத்தோபரில் சிறிதளவினால் அதிகரித்தமைக்கு ஆடை ஏற்றுமதிகளில் சிறிதளவு வீழ்ச்சி பதிவுசெய்யப்பட்டமைக்கு இடையிலும் புடவை ஏற்றுமதிகளிலிருந்தான உயர்ந்த வருவாய்கள் காரணமாக அமைந்தது. ஆடை ஏற்றுமதிகளிலிருந்தான குறைவடைந்த வருவாய்களுக்கு ஐரோப்பிய ஒன்றிய சந்தைக்கான ஏற்றுமதிகளும் இந்தியா, கனடா, யப்பான் மற்றும் ஹொங்கொங் போன்ற பாரம்பரியமற்ற சந்தைகளுக்கான ஏற்றுமதிகளும் அதிகரித்த போதும் ஐக்கிய அமெரிக்காவிலிருந்தான குறைந்த கேள்வியே முக்கிய காரணமாக அமைந்தது. மேலும், அளவு மற்றும் ஏற்றுமதி விலைகள் இரண்டினதும் இணைந்த தாக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் 2018 ஒத்தோபரில் பெற்றோலிய உற்பத்திகளிலிருந்தான வருவாய்கள் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தன. 2018 ஒத்தோபர் காலப்பகுதியில் உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை மற்றும் அடிப்படை உலோகம் மற்றும் அதன் பொருட்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் கணிசமாக அதிகரித்தமைக்கு அவற்றின் பெரும்பாலான துணைத் துறைகளின் செயலாற்றம் மேம்பட்டமையே காரணாக அமைந்தது. மேலும், விலங்குத்தீன், பொறிகள் மற்றும் எந்திர சாதனங்கள் மற்றும் போக்குவரத்துச் சாதனங்கள் என்பனவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 2018 ஒத்தோபரில் உயர்வடைந்து கைத்தொழில் ஏற்றுமதிகள் அதிகரிப்பதற்குப் பங்களித்தது. எனினும், இறப்பர் உற்பத்திகள், இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணம் மற்றும் தோல் உற்பத்திகள், பயணப்பொருட்கள் மற்றும் காலணிகள் என்பன 2018 ஒத்தோபரில் வீழ்ச்சியடைந்தன. அதேவேளை, கடலுணவு, காய்கறிகள் மற்றும் இறப்பர் தவிர்ந்த பெரும்பாலும் அனைத்துத் துணைத் துறைகளினதும் மோசமான செயலாற்றத்தின் காரணமாக இம்மாத காலப்பகுதியில் வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் குறைவடைந்தன. சராசரி ஏற்றுமதி விலைகள் மற்றும் ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு இரண்டும் குறைவடைந்தமையைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் 2018 ஒத்தோபரில் தேயிலையிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் வீழ்ச்சியடைந்தன. வாசனைத்திரவியங்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களும் கூட பெரும்பாலான வாசனைத்திரவிய வகைகளில் காணப்பட்ட மோசமான செயலாற்றத்தின் காரணமாக இம்மாத காலப்பகுதியில் குறைவடைந்தன. மேலும், உள்ளீடு அல்லா தெங்கு உற்பத்திகளிலிருந்தான வருவாய்களில் அதிகரிப்பொன்று காணப்பட்ட போதும் தெங்கு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்தமைக்கு தேங்காய்த் துருவல் மற்றும் தேங்காய் எண்ணெய் போன்ற தெங்கு உள்ளீட்டு உற்பத்திகளிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட வீழ்ச்சியே காரணமாக அமைந்தது. எனினும், ஐரோப்பிய ஒன்றிய சந்தைக்கான உயர்ந்த ஏற்றுமதிகளின் காரணமாக கடலுணவு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் இம்மாத காலப்பகுதியில் அதிகரித்தன. 2018 ஒத்தோபரில் இலங்கையின் வணிகப்பொருள் ஏற்றுமதிகளுக்கான முன்னணிச் சந்தைகளாக ஐக்கிய அமெரிக்கா,

ஐக்கிய இராச்சியம், இந்தியா, இத்தாலி மற்றும் சேர்மனி என்பன விளங்கி மொத்த ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 50 சதவீதத்திற்கு வகைகூறின.

**அட்டவணை 2: வணிகப்பொருட்கள் ஏற்றுமதியிலிருந்தான வருவாய்கள் (அ)**


| வகை | ஒத்தோபர் 2017 ஐ.அ.டொ. மில் | ஒத்தோபர் 2018 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) | சன - ஒத் 2017 ஐ.அ. டொ.மில் | சன - ஒத் 2018 ஐ.அ. டொ.மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **725.0** | **757.4** | **4.5** | **7,032.1** | **7,657.0** | **8.9** |
| உணவு, குடிபானம் மற்றும் புகையிலை | 35.1 | 42.7 | 21.7 | 331.4 | 389.9 | 17.7 |
| விலங்குத்தீன் | 5.8 | 8.3 | 43.2 | 62.2 | 91.1 | 46.5 |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 422.6 | 426.6 | 0.9 | 4,137.6 | 4,354.5 | 5.2 |
| இதில் ஆடைகள் | 399.7 | 395.8 | (1.0) | 3,895.2 | 4,062.7 | 4.3 |
| புடவைகள் | 15.2 | 23.0 | 51.5 | 170.3 | 213.4 | 25.3 |
| ஏனைய தயாரிக்கப்பட்ட புடவைப் பொருட்கள் | 7.7 | 7.8 | 0.9 | 72.2 | 78.4 | 8.6 |
| இறப்பர் உற்பத்திகள் | 78.8 | 71.4 | (9.4) | 693.5 | 727.6 | 4.9 |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 25.8 | 24.3 | (5.7) | 214.2 | 238.8 | 11.5 |
| பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் | 35.1 | 35.8 | 2.1 | 312.5 | 364.2 | 16.5 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 6.3 | 7.1 | 14.0 | 151.0 | 105.4 | (30.2) |
| பெற்றோலிய உற்பத்திகள் | 34.9 | 58.5 | 67.5 | 327.8 | 512.3 | 56.3 |
| இரசாயன உற்பத்திகள் | 14.0 | 13.6 | (2.9) | 122.2 | 141.6 | 15.9 |
| மரம் மற்றும் தாள் உற்பத்திகள் | 11.6 | 12.5 | 8.4 | 114.6 | 116.9 | 2.0 |
| அச்சிடல் தொழில்துறையின் உற்பத்தி | 3.7 | 1.5 | (59.2) | 37.9 | 24.8 | (34.5) |
| தோல், பயணப் பொருட்கள் மற்றும் காலணி | 11.0 | 9.1 | (16.9) | 131.4 | 128.2 | (2.5) |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 6.2 | 6.6 | 6.9 | 59.7 | 63.9 | 7.1 |
| அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் | 8.5 | 15.0 | 75.4 | 93.9 | 138.5 | 47.5 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 3.0 | 2.7 | (9.5) | 28.1 | 26.7 | (5.0) |
| ஏனையவை | 22.7 | 21.5 | (5.3) | 214.1 | 232.6 | 8.6 |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | **245.6** | **217.3** | **(11.5)** | **2,323.4** | **2,175.0** | **(6.4)** |
| தேயிலை | 136.2 | 115.5 | (15.2) | 1,275.9 | 1,208.2 | (5.3) |
| இறப்பர் | 1.8 | 2.4 | 31.7 | 33.4 | 27.5 | (17.5) |
| தேங்காய் | 30.1 | 28.6 | (5.2) | 303.3 | 266.7 | (12.1) |
| வாசனைத்திரவியங்கள் | 42.4 | 33.2 | (21.7) | 339.9 | 302.5 | (11.0) |
| மரக்கறிகள் | 2.5 | 3.0 | 20.5 | 24.6 | 23.9 | (2.9) |
| தயாரிக்கப்படாத புகையிலை | 2.9 | 2.5 | (13.6) | 29.6 | 29.2 | (1.4) |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 9.4 | 8.7 | (7.4) | 120.4 | 102.5 | (14.8) |
| கடலுணவு | 20.2 | 23.3 | 15.7 | 196.3 | 214.4 | 9.2 |
| **3. கனிமங்கள் மற்றும் ஏனையவை** | **4.9** | **4.4** | **(9.2)** | **44.5** | **44.7** | **0.4** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **975.6** | **979.1** | **0.4** | **9,400.0** | **9,876.7** | **5.1** |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானவை

## வணிகப்பொருள் இறக்குமதிகளின் செயலாற்றம்

**வரைபடம் 3: மாதாந்த இறக்குமதிச் செயலாற்றம்**




மூலங்கள்: இலங்கை சுங்கம், இலங்கை மத்திய வங்கி

2018 ஒத்தோபரில் வணிகப்பொருள் இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 1,882 மில்லியனுக்கு 9.0 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில்) அதிகரித்தன. இடைநிலைப்பொருட்கள், நுகர்வுப்பொருட்கள் மற்றும் முதலீட்டுப்பொருட்கள் ஆகிய அனைத்து மூன்று துணை வகைகளும் இறக்குமதிகளின் வளர்ச்சிக்குப் பங்களித்தன. புடவைகள் மற்றும் புடவைப்பொருட்கள், எரிபொருள் மற்றும் கோதுமையின் உயர்ந்த இறக்குமதிகள் மற்றும் சோள இறக்குமதிகளின் காரணமாக இடைநிலைப்பொருட்களின் மீதான செலவினம் அதிகரித்தது. புடவை மற்றும் புடவைப்பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் அதிகரித்தமைக்கு துணிகள் மற்றும் நூலிழைகளின் உயர்ந்த இறக்குமதிகளே முக்கிய காரணமாகும். சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியத்தின் இறக்குமதி அளவில் குறைப்பு பதிவுசெய்யப்பட்ட போதும் எரிபொருள் இறக்குமதிகள் மீதான செலவினம் அதிகரித்தமைக்கு மசகெண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள் இரண்டினதும் உயர்ந்த இறக்குமதி விலைகளே காரணமாக அமைந்தன. மேலும், இம்மாத காலப்பகுதியில் கோதுமை மற்றும் சோளம், இரசாயன உற்பத்திகள், வளமாக்கி, இறப்பர் மற்றும் அதன் பொருட்கள், பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் என்பனவற்றின் மீதான இறக்குமதிச் செலவினம் அதிகரித்தன. எனினும், 2018 ஒத்தோபரில் தங்க இறக்குமதிகள் மீதான செலவினம் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்து 2018 ஏப்பிறலிலிருந்து தங்க இறக்குமதிகள் மீது விதிக்கப்பட்ட சுங்கத் தீர்வையின் தாக்கத்தினைப் பிரதிபலித்தது. மேலும், இம்மாத காலப்பகுதியில் நுகர்வுப்பொருட்களின் மீதான இறக்குமதிச் செலவினம் அதிகரித்தமைக்கு 1,500 உருளை இயலளவிற்குக் குறைவான தனியாள் உந்து ஊர்திகள், கலப்பு மற்றும் மின்னியல் உந்து ஊர்திகள் என்பனவற்றின் உயர்ந்த இறக்குமதிகள் காரணமாக அமைந்தன. எனினும், 2018 செத்தெம்பரில் அறிமுகப்படுத்தப்பட்ட இறக்குமதி தொடர்பான கொள்கை வழிமுறைகளின் காலங்கடந்த தாக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் இனிவரும் மாதங்களில் உந்து ஊர்திகளின் இறக்குமதிகள் குறைவடையக் கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை இம்மாத காலப்பகுதியில் அரிசி இறக்குமதிகள் மீதான செலவினம் குறைவடைந்து உள்நாட்டுச் சந்தையில் போதுமானளவு கிடைக்கத்தக்கதாக இருந்தமையை எடுத்துக்காட்டியது. 2018 ஒத்தோபரில் ஆடைகள் மற்றும் துணைப்பொருட்கள், தொலைத்தொடர்பூட்டல் கருவிகள், வீட்டு உபயோகப்பொருட்கள் மற்றும் தளபாடப்பொருட்கள் மற்றும் வீட்டு உபயோகச் சாதனங்கள் போன்ற குறிப்பிட்ட வகைகள் மீதான இறக்குமதிச் செலவினம் இன்றியமையாதனவல்லாத நுகர்வுப்பொருட்களின் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளின் தாக்கத்தினை ஓரளவு பிரதிபலிப்பதாக இருக்கின்ற வேளையில் ஒப்பீட்டு ரீதியில் பாரிய பெறுமதி தேய்வுகளுக்கும் பதிலளித்திருந்தது. 2018 ஒத்தோபரில் முதலீட்டுப்பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் அதிகரித்தமைக்கு பொறி மற்றும் கருவிகள் மற்றும் கட்டட மூலப்பொருட்கள் மீது ஏற்பட்ட உயர்ந்த செலவினமே காரணமாக அமைந்தது. எனினும், எண்ணெய்த் தாங்கிகள் மற்றும் நீர்த்தாங்கிகள், சரக்கு வண்டிகள், பேருந்துகள் மற்றும் வர்த்தக வாடகை ஊர்திகள் போன்ற வர்த்தக ஊர்திகளின் குறைந்த இறக்குமதிகளின் காரணமாக போக்குவரத்துச் சாதனங்களின் மீதான இறக்குமதிச் செலவினம் குறைவடைந்தமையே முக்கிய காரணமாகும். 2018 ஒத்தோபரில் சீனா, இந்தியா, சிங்கப்பூர்,

யப்பான் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் என்பன முக்கிய இறக்குமதி நாடுகளாக விளங்கி மொத்த இறக்குமதிகளில் ஏறத்தாழ 61 சதவீதத்திற்கு வகைகூறின.

**அட்டவணை 3: வணிகப்பொருட்கள் இறக்குமதி மீதான செலவினம்(அ)**

| வகை | ஒத்தோபர் 2017 ஐ.அ.டொ. மில் | ஒத்தோபர் 2018 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) | சன - ஒத் 2017 ஐ.அ.டொ .மில் | சன - ஒத் 2018 ஐ.அ. டொ.மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **382.2** | **438.5** | **14.7** | **3,661.2** | **4,259.1** | **16.3** |
| உணவு மற்றும் குடிவகைகள் | 148.9 | 121.2 | (18.6) | 1,484.6 | 1,360.4 | (8.4) |
| தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் | 37.8 | 2.5 | (93.3) | 245.9 | 118.0 | (52.0) |
| இதில் அரிசி | 36.5 | 1.0 | (97.3) | 234.9 | 102.5 | (56.3) |
| பால் உற்பத்திகள் | 23.9 | 29.5 | 23.3 | 250.3 | 273.6 | 9.3 |
| மரக்கறிகள் | 24.4 | 20.6 | (15.6) | 288.0 | 256.1 | (11.1) |
| சீனி மற்றும் சிற்றுண்டிகள் | 14.2 | 13.4 | (5.8) | 213.7 | 210.1 | (1.7) |
| வாசனைத்திரவியங்கள் | 7.7 | 11.2 | 45.7 | 78.0 | 95.6 | 22.6 |
| குடிபானங்கள் | 6.6 | 9.6 | 44.2 | 67.1 | 73.8 | 10.1 |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 34.2 | 34.5 | 0.8 | 341.6 | 333.2 | (2.5) |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 233.3 | 317.3 | 36.0 | 2,176.6 | 2,898.7 | 33.2 |
| தனிப்பட்ட ஊர்திகள் | 54.8 | 160.8 | 193.2 | 615.2 | 1,391.4 | 126.2 |
| மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 48.7 | 48.6 | (0.3) | 423.3 | 442.1 | 4.4 |
| வீட்டுச்சாதனப் பொருட்கள் | 26.3 | 23.0 | (12.6) | 216.2 | 199.3 | (7.8) |
| ஆடைகள் மற்றும் துணைப் பொருட்கள் | 34.6 | 22.8 | (34.2) | 319.1 | 260.1 | (18.5) |
| தொலைத்தொடர்பூட்டல் சாதனங்கள் | 25.4 | 19.7 | (22.2) | 222.7 | 226.8 | 1.8 |
| வீட்டுச்சாதனங்கள் மற்றும் தளபாட வகைகள் | 19.2 | 14.6 | (24.0) | 152.6 | 143.6 | (5.9) |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவைகள் | 24.2 | 27.8 | 15.0 | 227.5 | 235.5 | 3.5 |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **948.4** | **1,017.5** | **7.3** | **9,169.6** | **10,430.3** | **13.7** |
| எரிபொருள் | 236.9 | 265.9 | 12.3 | 2,688.2 | 3,431.0 | 27.6 |
| இதில் மசகெண்ணெய் | 41.6 | 62.0 | 49.1 | 512.6 | 776.0 | 51.4 |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 176.1 | 200.9 | 14.1 | 1,982.2 | 2,504.6 | 26.4 |
| வைரங்கள் மற்றும் அருங்கற்கள், உலோகங்கள் | 79.5 | 13.2 | (83.3) | 594.3 | 542.9 | (8.7) |
| இதில் தங்கம் | 63.3 | 0.5 | (99.2) | 498.0 | 438.6 | (11.9) |
| புடவைகள் மற்றும் புடைவைப் பொருட்கள் | 242.1 | 279.7 | 15.5 | 2,240.6 | 2,371.3 | 5.8 |
| இரசாயண உற்பத்திகள் | 76.7 | 90.1 | 17.4 | 690.0 | 761.1 | 10.3 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 58.4 | 64.0 | 9.5 | 516.1 | 585.8 | 13.5 |
| கோதுமை மற்றும் சோளம் | 31.1 | 53.9 | 73.1 | 295.7 | 326.6 | 10.5 |
| அடிப்படை உலோகங்கள் | 43.4 | 46.6 | 7.4 | 462.6 | 519.8 | 12.4 |
| தாள் மற்றும் அட்டை மற்றும் அதன் பொருட்கள் | 46.1 | 46.6 | 1.1 | 399.7 | 441.3 | 10.4 |
| இறப்பர் மற்றும் அதன் பொருட்கள் | 24.3 | 32.2 | 32.6 | 240.6 | 228.8 | (4.9) |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வளமாக்கி | 10.6 | 23.1 | 118.5 | 81.8 | 210.9 | 158.0 |
| உணவுத் தயாரிப்புக்கள் | 22.8 | 20.2 | (11.6) | 245.8 | 254.2 | 3.4 |
| ஏனையவை | 76.4 | 81.9 | 7.2 | 714.3 | 756.7 | 5.9 |
| **3. முதலீட்டுப் பொருட்கள்** | **392.5** | **425.7** | **8.5** | **4,016.2** | **3,970.4** | **(1.1)** |
| பொறி மற்றும் கருவிகள் | 205.6 | 233.5 | 13.5 | 2,147.4 | 2,112.1 | (1.6) |
| கட்டடப் பொருட்கள் | 125.2 | 138.7 | 10.8 | 1,302.9 | 1,279.4 | (1.8) |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 61.2 | 53.1 | (13.3) | 559.0 | 573.8 | 2.6 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 0.5 | 0.5 | 0.0 | 6.8 | 5.1 | (25.5) |
| **4. வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **4.1** | **0.7** | **(82.8)** | **143.9** | **73.7** | **(48.8)** |
| **மொத்த இறக்குமதி** | **1,727.2** | **1,882.5** | **9.0** | **16,990.9** | **18,733.5** | **10.3** |


மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானவை

**நடைமுறைக் கணக்கிற்கான ஏனைய முக்கிய உட்பாய்ச்சல்கள்**


2018 ஒத்தோபரில் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 284 மில்லியன் என மதிப்பிடப்பட்டதுடன் 2018இன் முதல் பத்து மாத காலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த வருவாய்கள் ஐ.அ.டொலர் 3,496 மில்லியனாக விளங்கின. 2018 ஒத்தோபரில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 0.5 சதவீதத்தினால் சிறிதளவு அதிகரித்தமைக்கு 2017 ஒத்தோபருடன் ஒப்பிடுகையில் சீனா, ஜேர்மனி மற்றும் பிரான்ஸ் என்பனவற்றிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் வீழ்ச்சியடைந்தமையே காரணமாகும். 2018இன் முதல் பத்து மாத காலப்பகுதியில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் மொத்தமாக 2,080,627 ஆக விளங்கி 2017இன் தொடர்பான காலப்பகுதியினை விட 11.2 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. அதேவேளை, 2018 ஒத்தோபரில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் தொழிலாளர் பணவனுப்பல்கள் ஐ.அ.டொலர் 599 மில்லியனாக அமைந்து 2018 ஒத்தோபரில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 9.7 சதவீத அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. இதன் விளைவாக, ஆண்டின் முதல் பத்து மாத காலப்பகுதிக்கான தொழிலாளர் பணவனுப்பல்களில் காணப்பட்ட வீழ்ச்சி 2017இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 0.5 சதவீதமாகக் காணப்பட்ட வேளையில் 2018இன் முதல் பத்து மாத காலப்பகுதியில் பணவனுப்பல்களாகப் பெறப்பட்ட தொகை ஐ.அ.டொலர் 5,876 மில்லியனாகக் காணப்பட்டது.

**வரைபடம் 4: சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் முதல் ஐந்து மூலங்கள்**




மூலம்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

**வரைபடம் 5: சுற்றுலாவிலிருந்தான வருகைகள் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள்**




மூலங்கள்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை,
உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்,
இலங்கை மத்திய வங்கி


**நிதியியல் பாய்ச்சல்கள்**

ஒத்தோபர் மாத காலப்பகுதியில் நிதியியல் கணக்கிற்கான முக்கிய உட்பாய்ச்சலாக அரசாங்கத்தினால் பெறப்பட்ட ஐ.அ.டொலர் 1 பில்லியன் கொண்ட வெளிநாட்டு நாணய கால நிதியிடல் வசதி காணப்பட்டது. எனினும், கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை மற்றும் அரச பிணையங்கள் சந்தையிலிருந்தான குறிப்பிடத்தக்களவு வெளிப்பாய்ச்சல்களுடன் நிதியியல் கணக்கிலிருந்து வெளிநாட்டு முதலீடுகளின் வெளிப்பாயும் போக்கு 2018 ஒத்தோபரில் தொடர்ந்தும் காணப்பட்டது. ஒத்தோபர் மாதத்தில் அரச பிணையங்கள் சந்தை ஐ.அ.டொலர் 172 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலைப் பதிவுசெய்தமையின் காரணமாக 2018இன் முதல் பத்து மாத காலப்பகுதியின் இறுதியில் தேறிய ஒன்றுசேர்ந்த வெளிப்பாய்ச்சல் ஐ.அ.டொலர் 640 மில்லியனுக்கு உயர்வடைந்தது. அதேவேளை, இரண்டாந்தர மற்றும் முதலாந்தரச் சந்தைகளை உள்ளடக்கிய கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் வெளிநாட்டு முதலீடுகள் 2018 ஒத்தோபர் மாதத்தில் ஐ.அ.டொலர் 36 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்றைப் பதிவுசெய்தது. ஒன்றுசேர்ந்த அடிப்படையில் 2018இன் முதல் பத்து மாத காலப்பகுதியில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை ஐ.அ.டொலர் 1 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலைப் பதிவுசெய்தது. இது, முதலாந்தரச் சந்தைக்கான ஐ.அ.டொலர் 77 மில்லியன் கொண்ட உட்பாய்ச்சலையும் இரண்டாந்தரச் சந்தையிலிருந்தான ஐ.அ.டொலர் 76 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலையும் உள்ளடக்கியதாகக் காணப்பட்டது.

**பன்னாட்டு ஒதுக்குகள்**

2018 ஒத்தோபர் இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 7.9 பில்லியன் என மதிப்பிடப்பட்டதுடன் இது 4.2 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதாகக் காணப்பட்டது. மொத்த அலுவல்சார் ஒதுக்குகளையும் வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்துக்களையும் உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 2018 ஒத்தோபர் இறுதியில் ஐ.அ.டொலர் 10.4 பில்லியனாக விளங்கி 5.5 மாத இறக்குமதிகளுக்குச் சமனானதாகக் காணப்பட்டது.

**வரைபடம் 6: மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் திரண்ட நிலுவை**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

## செலாவணி வீத அசைவுகள்

2018 திசெம்பர் 21 வரையான இவ்வாண்டு காலப்பகுதியில் இலங்கை ரூபா, ஐ.அ.டொலருக்கெதிராக 15.5 சதவீதத்தினால் தேய்வடைந்தது. மேலும், குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் இக்காலப்பகுதியில், ரூபா அனைத்து முக்கிய நாணயங்களுக்கெதிராகவும் தேய்வடைந்தது. ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபா நலிவடைந்தமையானது, முக்கியமாக உலகளாவிய ரீதியில் ஐ.அ.டொலர் பரந்த அடிப்படையொன்றில் வலுவடைந்தமையினையும் அரச பிணையங்கள் சந்தையிலிருந்தான வெளிப்பாய்ச்சலையும் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் காணப்பட்ட இறக்குமதிகளுடன் தொடர்பான கொடுப்பனவுகளுக்கான கேள்வியையும் பிரதிபலித்தது.

**வரைபடம் 7: ஐ.அ.டொலரொன்றிற்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 4: தெரிவுசெய்யப்பட்ட நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**

| நாணயம் | 2017 | 2018 திசெ 21 வரை உயர்வு (+) / தேய்வு (-) |
|---|---|---|
| ஐ.அ.டொலர் | -2.0% | -15.5% |
| யூரோ | -13.5% | -11.9% |
| பவுண் ஸ்ரேலிங் | -10.5% | -10.2% |
| யப்பானிய யென் | -5.1% | -16.6% |
| கனேடியன் டொலர் | -8.6% | -9.2% |
| அவுஸ்திரேலிய டொலர் | -9.0% | -7.5% |
| இந்தியன் ரூபா | -7.5% | -7.7% |

மூலம்: இலங்கை மத்திய வங்கி